வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ஈழநாடு



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 05  12.06.2024 புதன்கிழமை  இதழ் : 164  பக்கங்கள் : 12

# புதிய அரசமைப்பு மூலமே இனப் பிரச்னைக்கு தீர்வு!

## தமிழ் அரசு கட்சியிடம் அநுர உறுதி

### 13 முழுமையாக தற்காலிக நடைமுறை

யாழ்ப்பாணம், ஜூன் 12

"தேசிய இனப்பிரச்னைக்கு புதிய அரசமைப்பு மூலமே தீர்வு காணப்படவேண்டும். அதுவரையில் மாகாண சபை முறைமையை - அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறையாக்கம் செய்வோம்" - என்று இலங்கை தமிழ் அரசு கட்சியினரிடம் கூறியுள்ளார் ஜே. வி. பி. என்று அறியப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க.



யாழ்ப்பாணம் வந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழுவினர் நேற்று தமிழ் அரசு கட்சியினரை தமிழ் அரசின் தலைமை பணிமனையில் சந்தித்து பேசினர்.

இதில், மாகாண சபை முறைமையை நாங்கள் முன்னர் ஏற்காவிடினும் தமிழ் மக்கள் விரும்புகின்றனர். இதனால், நாம் அதனை ஏற்றுள்ளோம். 2019 ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனைத் தெரிவித்துள்ளோம். தேசிய இனப் பிரச்னைக்கு 13ஆவது திருத்தம் தீர்வாகாது என்று தமிழர் தரப்பு கூறுவதைப் போலவே, அது தீர்வு அல்ல என்பதைத் நாங்களும் ஏற்றுள்ளோம். இனப்பிரச்னைக்குத் தீர்வு புதிய அரசமைப்பு மூலமே எட்டப்பட வேண்டும். அதுவரையில் மாகாண சபை முறைமை நீடிக்கவேண்டும்.

தாமதிக்காமல் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். 13 ஆம் திருத்தம் மூலம் அரசமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - இவ்வாறு தமிழ் அரசு கட்சியினரிடம் அநுர குமார கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெளியாகும் தேர்தல் விஞ்ஞாபனத்தை பொறுத்து தமிழ் அரசு கட்சி தனது ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கும் என்று இந்த சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

11

அரசமைப்பில் விடப்பட்ட தவறால்

# ரணில் பதவிக் காலத்தை ஒரு வருடம் நீடிக்க முடியும்!

### எக்கணமி நெக்ஸ்ட் இணையம்

கொழும்பு, ஜூன் 12

அரசமைப்பில் காணப்படும் கவனிக்காமல் விடப்பட்ட சிறிய தவறு ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தையும் பாராளுமன்றத்தின் ஆயுள் காலத்தையும் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கக்கூடிய வாய்ப்பை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் பிரபல ஆங்கில இணையத்தளமான எக்கணமி நெக்ஸ்ட் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அது தனது தளத்தில் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

2015இல் 19ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்த காலம் முதல் கவனம் செலுத்தப்படாமலிருந்த அரசமைப்பின் ஒரு தவறை பயன்படுத்தி

11

# ஜனாதிபதி தனது பதவி காலத்தை 5 ஆண்டைவிட அதிகரிக்க முடியாது!

### பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

அரசமைப்பின் 19ஆம் திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருடங்களுக்கு மேல் அதிகரிக்க முடியாது. இதன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அந்த அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அரசமைப்பின் பிரகாரம் மக்கள் ஆணை இன்றி, நாட்டின் ஜனாதிபதிக்கு 5 வருடங்களுக்கு அப்பால் சென்று ஜனாதிபதி

11

# பொது வேட்பாளரை ஆதரிப்பதில்லை!

## இது தமிழ் அரசின் முடிவு என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 12

தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதில்லை என்பது இலங்கை தமிழ் அரசு கட்சியின் முடிவு என்று கூறியுள்ளார் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

டான் தமிழ் ஒளியில் ஒளிபரப்பாகும் கேள்விக்கு என்ன பதில் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ் பொது வேட்பாளரை இலங்கை தமிழ்

11

# 2024 உயர்தர பரீட்சையை நவம்பரில் நடத்தத் திட்டம்

### கல்வி அமைச்சர் சுசில்



கொழும்பு, ஜூன் 12

இந்த ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சு ஏற்பாடு செய்த நிகழ்வு ஒன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

"இந்த ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர

11

# ஐ. எம். எவ்வின் 3ஆம் கட்ட கடன் குறித்த பேச்சு இன்று

கொழும்பு, ஜூன் 12

சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) மூன்றாவது தவணை கடன் வழங்குவது குறித்த பேச்சு இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு குழு இலங்கைக்கான திட்டத்தின் இரண்டாவது மதிப்பாய்வை நிறைவு செய்தது.

இந்த நிலையில், இலங்கைக்கு மூன்றாம் தவணை கடன் தொகையை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்போது, இலங்கையின்

11

# சீன கடலட்டை பண்ணைகளை வடக்கில் சிறீதரன் காட்டுவாரா?

### இப்படி கேட்கிறது ஈ. பி. டி. பி. கட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 12

வட பகுதியில் சீன நாட்டின் கடலட்டை பண்ணைகள் எங்கு இருக்கின்றன என்பதை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் காண்பிக்க முடியுமா - இவ்வாறு சவால் விடுத்துள்ளார் ஈ. பி. டி. பி. கட்சியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன்.

கடந்தகாலங்களில் மரண வியாபாரத்தை முன்னெடுத்த அவருக்கு இவ்வாறான பொய்கள்தான் தற்போது தேவையாக இருக்கின்றன என்றும் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சாடினார்.

மேலும், "சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில்

11

# டலஸ், தயாசிறி, ரணசிங்க சஜித் தரப்புடன் பேச்சு?

கொழும்பு, ஜூன் 12

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைக்க பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் டலஸ் அழகப்பெரும, தயாசிறி ஜயசேகர, ரொஷான் ரணசிங்க ஆகியோர் பேச்சு நடத்தி வருகின்றனர் என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் கடந்த தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு வெற்றி


11

தமிழ் பொது வேட்பாளர்:

# நிலைமை சிக்கலானால் நான் போட்டியிடுவேன்!

### சிவாஜிலிங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12



"தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் சுயேச் சையாக போட்டியிடுவேன்", என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

டான் ரீ. வி. யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் அரசியல் நிகழ்ச்சியை ஊடகவியலாளர் ஜெயச்சந்திரன் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அவர், நிகழ்ச்சிகளில் அனைத்து அரசியல் கட்சிகளையும் விவாதத்துக்கு அழைத்திருப்பார். அப்படி அழைத்தபோதிலும் ஏதேனும் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் அதில் கலந்துகொள்ள மறுத்தால் ஒரு கதிரையை வைத்துவிட்டு அதில் அந்த கட்சியின் பெயரை எழுதி வைத்திருப்பார்.

அந்த சம்பவம்தான் அன்றும் அந்த நிகழ்ச்சியை பார்த்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

கடந்த ஆறாம் திகதி சஜித் பிரேமதாஸவுக்கும் அநுரகுமார திஸநாயக்காவுக்கும் இடையே பகிரங்க விவாதம் நடக்கவிருந்தது.

விவாதத்துக்கு முதன்முதலில் அழைப்பு விடுத்தவர்கள் ஜே. வி. பியினர்தான் என்றாலும், அந்த சவாலை ஏற்றுக்கொண்டு தத்தமது பொருளாதார திட்டங்கள் குறித்து பகிரங்க விவாதம் நடத்தத் தாம் தயார் என்றும் ஆனால், தலைவர்கள் விவாதிக்கும் அதேவேளையில் இரண்டு கட்சிகளின் பொருளியல் வல்லுநர்கள் குழுவும் விவாதிக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் கோரிக்கை விடுத்தார்.

ஆனால், அது குறித்து பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருந்த தேசிய மக்கள் சக்தி முதலில் சஜித்துடன் விவாதத்துக்கு தாங்களே திகதியையும் நிர்ணயித்து அனுப்பியிருந்தது. ஆனால், அந்தத் திகதி தமக்கு வசதியில்லை என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி தமக்கு வசதியான நாள் ஒன்றை அறிவித்தது.

அந்த நாள் கடந்த ஆறாம் திகதி. அதாவது இரு தலைவர்களும் நேருக்கு நேர் விவாதிக்க சஜித் அணி குறிப்பிட்ட நாள். ஆனால், தமது பொருளாதார நிபுணர்கள் குழுவுடனும் விவாதத்துக்குத் தயார் என்றால் மாத்திரமே தாம் அந்த விவாதத்தில் கலந்துகொள்வோம் என்றும் தனிப்பட்ட தலைவர்கள் மாத்திரம் கலந்துகொள்ளும் விவாதத்தில் கலந்துகொள்ள முடியாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது.

இந்த பகிரங்க விவாதத்தை அரச தொலைக்காட்சியான ஐ. ரி. என். தொலைக்காட்சியிலேயே நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஆறாம் திகதி தமது நிபுணர்கள் குழுவுடனும் அவர்களின் நிபுணர்கள் குழு விவாதம் நடத்துவதென்றால் மாத்திரமே தான் அந்த விவாதத்துக்கு வருவேன் என்று சஜித் அறிவித்துவிட்டபோதிலும், குறிப்பிட்ட அந்தத் திகதியில் அநுரகுமார திஸநாயக்க ஐ. ரி. என். பணிமனையில் வந்து இறங்கிவிட்டார்.

சஜித் குறிப்பிட்ட அதேதினத்தில் தான் விவாதத்துக்கு வந்திருக்கிறார் என்று கூறிய அநுரகுமார, அங்கே தொலைக்கட்சியின் நிகழ்ச்சி தொகுப்பாளர்களுடன் விவாதத்தில் கலந்துகொண்டார். சஜித் வரவில்லை என்பதை சஜித்தின் பலவீனமாகக் காட்ட ஐ. ரி. என். தீவிர முயற்சி எடுத்ததை அன்றைய நிகழ்ச்சியை பார்த்தபோது புரிந்துகொள்ள முடிந்தது.

ஐ. ரி. என். தொலைக்கட்சி முழுக்க முழுக்க அரச கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு நிறுவனம். இப்படி அவர் விவாதத்துக்கு வரவில்லை என்பதை அறிவித்த பின்னரும் அநுரவை வரவழைத்து விவாதத்தை நடத்தி, சஜித்தை சங்கடத்துக்கு உள்ளாக்கியதன் பின்னணியில் யார் இருந்திருப்பார்கள் என்பது நாம் புரிந்துகொள்ளக்கூடியதே.

இப்போது நேற்றிலிருந்து சமூகவலைத்தளங்களை ஆக்கிரமித்திருப்பது, சஜித் பிரேமதாஸவின் யாழ்ப்பாண வருகையின்போது நடந்த சம்பவம் ஒன்றுதான்.

சஜித் பிரேமதாஸவின் யாழ்ப்பாண வருகையின்போது, தான் சென்றிருந்த ஒரு மைதானத்தில் நின்றவாறு, "இங்கே டெஸ்ட் போட்டிகள் நடத்தக்கூடிய மைதானம் எதுவும் இல்லையா?" என்று கேட்கிறார்.

அவர் என்ன கேட்கிறார் என்பதை புரிந்துகொள்ளாத அவருக்கு பதிலளிக்கும் நபர், தாங்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தையே பயன்படுத்துவதாகக் கூற, அவர் "இல்லை இல்லை டெஸ்ட் போட்டி நடத்தக்கூடிய மைதானம், லைற்றுக்கள் எல்லாம் பூட்டி..... அதாவது ஆர். பிரேமதாஸ மைதானம் போல..." என்று கேட்கிறார்.

இத்தனைக்கும் அவருக்கு மொழிபெயர்ப்பாளராக பணியாற்றிக் கொண்டிருந்தவர், அவரின் கட்சியின் யாழ்ப்பாணத்துக்கான பிரதம அமைப்பாளர் மாத்திரமல்ல கட்சியின் பிரதி செயலாளரும்கூட.

அவருக்குக்கூட யாழப்பாணத்தில் ஒரு சர்வதேச தரத்துடன் டெஸ்ட் போட்டிகளை நடத்தக்கூடிய மைதானம் இல்லை என்பது தெரிந்திருக்கவில்லை. தேசிய கட்சிகளின் பிரச்னையே இதுதான். தமது கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளராக யாரை நியமிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்வதில்லை. தமது அமைப்பாளராக இருப்பவர், அவர் எத்தகைய விடயங்களை தெரிந்து வைத்திருக்கும் ஒருவராக இருக்கவேண்டும் என்ற சாதாரண அறிவைக்கூட அவர்கள் கொண்டிருக்கின்றனரா என்பதைக்கூட கவனிப்பதில்லை.

வைரலாகும் இந்த காணொலியை பார்த்துவிட்டு, தெற்கிலிருந்து ஓர் இளம் அரசியல்வாதி இந்த ஊர்க்குருவியுடன் தொடர்பு கொண்டு கேட்டார், "என்ன சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்துக்கு வந்து அங்கும் அம்பலப்பட்டு நிற்கிறார்போல.." என்று.

அண்மையில் சில நாட்களாக, தனது அரசியல் எதிரிகளை, அவர்களின் பலவீனங்களை வெளிச்சம் போடும் வேலையை 'அவர்' தொடக்கிவிட்டார் என்றும் இதே அரசியல் பிரமுகர்தான் சில நாட்களுக்கு முன்னர் ஊர்க்குருவிக்கு சொல்லியிருந்தார்.

அவர் சொன்ன அந்த 'அவர்' யார் என்பதை புரிந்துகொள்ள நமது வாசகர்களுக்கு அதிகம் சிரமம் இருக்காது என்பதால் அவர் யார் என்பதை இங்கே குறிப்பிடவில்லை.

இப்போது அந்த 'அவரின்' வேலையை இவரும் இலகுவாக்குகிறார் என்றே தெரிகின்றது.

ஊர்க்குருவி.

## இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துக்கு பங்களாதேஷ் ஒத்துழைக்கும்

புதுடில்லி, ஜூன் 12

இலங்கையில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துக்கு பங்களாதேஷ் ஒத்துழைப்பு வழங்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதியளித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க டில்லி சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுகள் நேற்று முன்தினம் காலை நடைபெற்றன. இதன்போதே பங்களாதேஷ் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவு முறையின் அடிப்படையில் பங்களாதேஷில் செயல்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை ஆராய்ந்து இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக இலங்கை விவசாயத்துறை நிபுணர்கள் குழுவொன்றை பங்களாதேஷுக்கு அனுப்புவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்தார்.

பங்களாதேஷின் தனியார் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதாகவும் பங்களாதேஷ் பிரதமர், ஜனாதிபதியிடம் உறுதியளித்தார். (எ)

## வரிகளை அதிகரித்ததன் மூலம் ரூ. 2,662 பில்லியன் வசூலித்த அரசு

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூன் 11

2023 ஆம் ஆண்டு அனைத்து வகையான வரிகளையும் அதிகரித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1550 பில்லியன் ரூபாய் வசூலித்துள்ளது என்றும் வரிகள் அதிகரிப்பு மூலம் 2662 பில்லியன் ரூபாயை அரசு வசூலித்துள்ளது என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் மூலம் சுங்கத் திணைக்களம் 923 பில்லியன் ரூபாய், மதுவரித் திணைக்களம் 169 பில்லியன் ரூபாய், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் 20 பில்லியன் ரூபாய் வசூலித்துள்ளதுடன், வரி அல்லாத வருமானம் 219 பில்லியன் ரூபாய் கிடைத்துள்ளது.

அத்துடன், 16 பில்லியன் ரூபாய் நன்கொடையாகக் கிடைத்துள்ளது. பல்வேறு வைப்பு நிதிகள் மூலம் 304 பில்லியன் ரூபாய் பெறப்பட்டுள்ளது. இதன்படி, அனைத்து வழிகளிலும் பெறப்பட்ட மொத்த வருமானம் 3201 பில்லியன் ரூபாயாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருமானங்கள் மூலம் அரசாங்கத்தின் அன்றாடச் செயல்பாடுகள், அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும போன்ற நலன்புரி கொடுப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான வட்டி என்பவற்றைச் செலுத்த வேண்டும். அதற்காக 2023 ஆம் ஆண்டில் மட்டும் 4.3 ட்ரில்லியன் ரூபாய் செலவாகியுள்ளன.

உலக வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பின் கீழ் 3655 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் நிவாரணம் கிடைக்கும் என்று கருதப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## ரூ. 100,000 கோடி வரி பாக்கியை வசூலிப்பதற்கு நடவடிக்கை!

### நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜூன் 12

ஒரு இலட்சம் கோடி (ஒரு ட்ரில்லியன்) ரூபாய்க்கும் அதிகமான வரி பாக்கியை மீளப்பெறுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான சுருக்க அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட தயாராக உளளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் மாலை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வருவாயை வசூலிக்கத் தவறினர் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த நிலையில், உள்நாட்டு இறைவரி, சுங்கத் திணைக்களம் போன்றவை இந்த ஆண்டு இலக்கு வருவாயை மீறுவதற்கு ஏற்கனவே வேலை செய்துள்ளன. எனினும், குறிப்பிட்ட சில அதிகாரிகளாலும் தனிப்பட்ட நபர்களாலும் தவறுகள் இடம்பெறுவது உண்மை. ஆனாலும், உத்தியோகத்தர்கள் ஒட்டுமொத்தமாக தமது பொறுப்பை முழுமையாக நிறைவேற்றியுள்ளனர்.

இருப்பினும், வரி பாக்கிகள் ஏற்படுவதற்கு நியாயமான காரணங்களும் இருக்கின்றன. வரி மேன்முறையீட்டு நடைமுறை மற்றும் அரச நிறுவனங்களுக்கு அரசாங்கம் செலுத்த வேண்டிய வரித் தொகையும் இதில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதன்படி, வரி நிலுவைத் தொகையை மீட்பதற்காக தற்போதுள்ள நிதித்துறையை விரைவுபடுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அரச நிறுவனங்களில் இருந்து வசூலிக்க வேண்டிய நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு அல்லது நீக்குவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளன.

சில வரி பாக்கிகள் சுமார் 25 வருடங்களாக நிலவுகின்றன. இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காணும் விஞ்ஞான முறையிலான சுருக்கத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தாலும் அது தொடர்பான விரிவான அறிக்கையை அடுத்ததாக வரும் பாராளுமன்ற அமர்வின் போது சமர்ப்பிக்கத் தயார் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.06.2024 புதன்கிழமை
குரோதி வருடம், வைகாசி 30

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தேர்தல்கால வாக்குறுதிகளை நம்புதல்...!

சஜித் பிரேமதாஸ வடக்கு வருகையின்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பேசியிருக்கிறார் - அத்துடன், மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பிலும் பேசியிருக்கின்றார். 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் நீண்டகாலமாக பேசப்பட்டுவரும் ஒரு விடயம். மகிந்த ராஜபக்ஷ அதனை தாண்டிச் செல்வதாக குறிப்பிட்டார். ஆனால், எதுவும் நடைபெறவில்லை.

2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர், மைத்திரி - ரணில் கூட்டணியின் கீழ் புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அது தொடர்பில் சம்பந்தன் அணி அளவுக்கு அதிகமான நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தது. தமிழ் கட்சிகள் 'ஏக்கிய ராஜ்ய' என்னும் சொல்லுடன் மல்லுக்கட்டினர். சமஷ்டி பதுங்கியிருக்கின்றது என்றவாறெல்லாம் கதைகள் புனையப்பட்டன. பின்னர் நடந்ததை தமிழ் மக்கள் அறிவர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் நகர்வுகள் மிகவும் வெளிப்படையானவையாக இருந்தன. இலங்கையை ஒரு சிங்கள - பௌத்த நாடு என்னும் வகையில், அதனை மேலும் உறுதிப்படுத்தும் ஓர் அரசியல் யாப்பை கொண்டுவரும் முயற்சியில் கோட்டாபய ராஜபக்ஷ ஈடுபட்டார். 'அறகலய' மக்கள் எழுச்சியின் விளைவாக அவர் அதிகாரத்திலிருந்து அகற்றப்படாமல் இருந்திருந்தால் ஒருவேளை அவ்வாறானதோர் அரசியல் யாப்பு வந்தும் இருக்கலாம் - ஒருவேளை அவ்வாறு நடந்திருந்தால் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 1978 அரசியல் யாப்பை விடவும் அதிக அதிகாரங்களை ஓரினத்தை நோக்கி குவிக்கும் சிங்கள - பௌத்த யாப்பு ஒன்றை கொண்டு வந்தவர் என்னும் வரலாற்றுக்கு கோட்டாபய சொந்தக்காரனாகி இருக்கலாம்.

ஒரு நாட்டின் மக்கள் ஜனநாயக முறைமையின் கீழ் ஓர் அரசியல் யாப்பைக் கொண்டுவர முற்பட்டால் அதில் ஓர் எல்லைக்கு மேல் வேறு நாடுகள் தலையீடு செய்ய முடியாது. ஆனால், "பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்பதுபோல் பொருளாதார நெருக்கடிக்கு முன்னால் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆர்ப்பாட்டமான சிங்கள கதைகள் அனைத்தும் காணாமல் போய்விட்டன. இறுதியில் அவமானகரமான அனுபவத்துடன் அதிகாரத்திலிருந்து கோட்டாபய துரத்தியடிக்கப்பட்டார்.

எவரும் எதிர்பாராத வகையில் கதிரையில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க மீண்டும் 13ஆவது திருத்தச் சட்டத்தை பேசு பொருளாக்கினார். ஆனால், பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த விடயங்கள் தொடர்பிலேயே பேசுவதாகக் கூறினார். இதேவேளை, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்த ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கூறி இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தன. ஆனால், பின்னர் அரசியல் தீர்வு தொடர்பில் மூன்று கடிதங்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன.

இவ்வாறனதொரு பின்புலத்தில் தமிழ் மக்களின் வாக்குகள் தன்னை நோக்கித்தான் வருமென்று நம்பிக் கொண்டிருக்கும் சஜித் பிரேமதாஸ 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது பற்றி கூறியிருக்கின்றார். ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது என்று கூறுவதற்கும் பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலான 13ஆவது திருத்தம் என்று பேசுவதற்கும் இடையில் வேறுபாடுகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் இவ்வாறான தேர்தல்கால வாக்குறுதிகளை நம்பி தமிழ் மக்கள் வாக்களிக்க முடியுமா?

### துன்னாலை கொல்களத்தில்
# இறைச்சியாக்கப்படவிருந்த 3 பசு மாடுகள் மீட்கப்பட்டன

வடமராட்சி, ஜூன் 12

வடமராட்சி - துன்னாலையில் சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட பொலிஸார் இறைச்சியாக்கப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளை நேற்று செவ்வாய்க்கிழமை மீட்டனர். அத்துடன், சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் அண்மையில் வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டன. இது தொடர்பில் பொலிஸார் நடத்திய விசாரணையில் இந்த சட்டவிரோத கொல்களம் பற்றி தெரிய வந்தது.

இதையடுத்து செயலில் இறங்கிய சாவகச்சேரி பொலிஸார், நேற்று கொல்களத்தை முற்றுகையிட்டனர். இதன்போதே கன்றுத்தாச்சி மாடு உட்பட 3 பசு மாடுகளும் மீட்கப்பட்டன.



மீட்கப்பட்டவற்றில் ஒரு மாடு மட்டுவிலை சேர்ந்தவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏனைய இரு மாடுகளும் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## துப்பாக்கிசூட்டில் ஒருவர் காயம்!

கொழும்பு, ஜூன் 12

கம்பஹா, ஹொர கொல்ல பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரகொல்ல பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே காயமடைந்துள்ளார்.

இவர் ஹொரகொல்ல பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு சென்றிருந்த போது இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காயமடைந்தவர் வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு வேட்டை துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாக முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

## கருவி நிறுவனத்தின் 11ஆவது ஆண்டு விழா

கொழும்பு, ஜூன் 12

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் 11ஆவது ஆண்டு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நீர்வேலியில் அமைந்துள்ள கருவி நிறுவனத்தில் கருவி நிறுவனத்தின் கௌரவ தலைவர் கணபதி சர்வானந்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ச. சிவசிறி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக புத்தூர் பிரதேச சபையின் செயலாளர் இ. பகீரதன், கௌரவ விருந்தினராக இங்கிலாந்தின் கருவி நிறுவன இணைச் செயலாளர் வசந்தி சேகரம் ஆகியோர் பங்கேற்பர். (ஐ)

## 'பின் தொடரும் வலி' நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 12

மூத்த முற்போக்கு எழுத்தாளர் மு. அநாதரட்சகன் எழுதிய 'பின் தொடரும் வலி' சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு எதிர்வரும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் 'தாயகம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வாழ்த்துரைகளை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம், நூல் அறிமுக வுரையை மூத்த எழுத்தாளர் சாகித்யரத்னா ஐ. சாந்தன், நூல் மதிப்பீட்டுரையை ஆசிரியரும், எழுத்தாளருமான சிறீலேக்கா பேரின்பகுமார் ஆகியோர் வழங்குவர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 12 புதன்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 30
நல்ல நேரம் : 09.30 - 11.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சஷ்டி




**மேடம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டோமே என்று ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சக ஊழியர்களிடம் மோதல்கள் வரக்கூடும். கவனம் தேவை.

**கன்னி**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புதிய நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். நண்பர்கள், உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. புதியவர்கள் அறிமுகமாவார்கள். உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

# பாராளுமன்ற கட்சி தலைவராக ராகுல் காந்தியை தெரிவு செய்க

## தமிழ்நாடு காங்கிரஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 12

பாராளுமன்ற கட்சித் தலைவராக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியை தெரிவு செய்ய வேண்டும் என்பது உட்பட ஏழு தீர்மானங்கள் தமிழ்நாடு காங்கிரஸின் பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் மாநில பொதுக்குழு கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இதற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமை தாங்கினார். இந்தக்




கூட்டத்தில் தமிழக காங்கிரஸ் செயல்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, பாராளுமன்ற கட்சித் தலைவராக ராகுல் காந்தியை தெரிவு செய்ய வேண்டும் என்பது உட்பட ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ)

# நீட் தேர்வில் முறைகேடு; மாணவர்கள் கொந்தளிப்பு!

சென்னை, ஜூன் 12

நீட் தேர்வில் முறைகேடு நடந்துள்ளதைக் கண்டித்து தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீட் தேர்வு முடிவுகள் வெளியானதில் குளறுபடி, மற்றும் வினாத்தாள் கசிவு உள்ளிட்டவற்றைக் கண்டித்து தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சென்னை, திருச்சி, மதுரை, கோவை, தூத்துக்குடி, நாமக்கல் உள்ளிட்ட நகரங்களிலும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் சாஸ்திரி பவனை முற்றுகையிட்டு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களை பொலிஸார் அகற்ற முற்



பட்ட போது மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

அதேபோன்று, நீட் தேர்வு குளறுபடியை கண்டித்தும், நீட் தேர்வை இரத்துச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும் கடலூரில் தலைமை தபால் அலுவலகம் முன்பு இந்திய மாணவர்கள் சங்கத்தினர் போராட்டம் நடத்தினர். (எ)

# தி. மு. க. பாராளுமன்ற குழு தலைவரானார் கனிமொழி

சென்னை, ஜூன் 12

மக்களவை, மாநிலங்களவை என இரண்டுக்கும் சேர்த்து தி. மு. க. குழுத் தலைவராக கனிமொழியை நியமித்து முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.


இதன்படி, மக்களவை, மாநிலங்களவை என இரண்டு அவைகளுக்கும் சேர்த்து பாராளுமன்ற தி. மு. க. குழு தலைவராக அந்தக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழியும், மக்களவை குழு தலைவராக பொருளாளர் டி. ஆர். பாலுவும், மக்களவை குழு துணை தலைவராக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறனும், மக்களவை கொறடாவாக துணை பொதுச் செயலாளர் ஆ. ராசாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்களவை பொதுத் தேர்தலில் பா. ஜ. க. கூட்டணி 293 இடங்களைப் பெற்று 3 ஆவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது. தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதிகளையும் தி. மு. க. தலைமையிலான இந்தியா கூட்டணி கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (எ)

# தி. மு. க. வேட்பாளராக அன்னியூர் சிவா போட்டி

சென்னை, ஜூன் 12

தி. மு. க. வின் விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா விக்கிர வாண்டி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுவார் என்று அந்தக் கட்சியின் தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். (எ)



# ராகுலுக்கு பெருந்தன்மை இல்லையாம்



சென்னை, ஜூன் 12

நாட்டின் பிரதமருக்கு வாழ்த்து சொல்லும் பெருந்தன்மைகூட இல்லாத ராகுல் காந்தி எதிர்க் கட்சித் தலைவராகி என்ன செய்யப்போகிறார்- இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் பா. ஜ. க. தேசிய செயல்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு.

மோடி 3 ஆவது முறையாக பிரதமர் பதவியேற்று சாதனை படைத்துள்ளார். உலகத் தலைவர்கள் எல்லாம் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்தை விரும்பும் ராகுல் காந்தி வாழ்த்து சொல்லவில்லை. இதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குலாம்நபி ஆசாத்தை கட்சி பாகுபாடு பார்க்காமல் பாராளுமன்றத்தில் பிரதமர் மோடி வாழ்த்தியதை கேட்டு அவர் கண் கலங்கினார்.

மக்கள் பிரதிநிதிகளாக யார் வந்தாலும் சரி மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். அதைத் தான் மக்கள் எதிர்பார்ப்பார்கள் - இவ்வாறு குஷ்பு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலில் மக்கள் மத்தியில் புரிந்துணர்வு; பின்னரே சிக்கலான விடயம் நடைமுறை

## காணி, பொலிஸ் அதிகாரத்துடன் கூடிய 13ஐ கேட்டவர்களுக்கு சஜித் இப்படி விளக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

**13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன். மக்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்திய பின்னரே சிக்கலான விடயங்களை கையாள வேண்டும் என்று கூறியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவீர்களா என்ற கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் வந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் ஆயர் இல்லத்துக்கு சென்றார். அங்கு குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரை சந்தித்து பேசிய அவர், ஆயர் இல்லத்தை சேர்ந்தவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளித்துள்ளதாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் சில பிரமுகர்கள் கூறியமை தொடர்பில் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த எதிர்க்கட்சி தலைவர் - "13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன். முதலில் மக்கள் மத்தியில் புரிந்துணர்வையும் - இணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னரே சிக்கலான விவகாரங்களை கையாள வேண்டும்." என்றார்.



கடந்த காலங்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களித்து அவர்கள் எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. இதனால் விரக்தியடைந்த தமிழ் மக்கள் தமது கோரிக்கையை வலியுறுத்த தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த முயற்சிக்கிறார்கள். இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன என குருமார் கேள்வியெழுப்பிய போது,

"ஜனநாயக நாடொன்றில் ஜனநாயக ரீதியாக நடைபெறும் தேர்தலில் யாரும் போட்டியிடலாம். மக்கள் யாருக்கும் வாக்களிக்கலாம். அதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் எனது தனிப்பட்ட கருத்து, பொதுவேட்பாளர் என்பது பொதுவான பேரழிவாக வரும்", என்றார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

இந்த விவகாரத்துக்கு எப்போதோ தீர்வு கண்டிருக்க வேண்டும். தென்னாபிரிக்க மாதிரி உண்மையை கண்டறியும் குழுவை நிறுவி, உண்மையை வெளிப்படுத்துவோம் - என்றார்.

(ஐ)



# நயினை அம்மன் ஆலயத்தில் சஜித் பிரேமதாஸ வழிபாடு!

யாழ்ப்பாணம், ஜூன் 12

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று விசேட வழிபாடாற்றினார்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் உள்ளிட்ட கட்சி அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பல்வேறு இடங்களுக்கும் பயணித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இராணுவ பவுஸர் மோதி இளைஞர்கள் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரே படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமை நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ பவுஸர் வாகனமே இந்த விபத்தை ஏற்படுத்தியதாகத் தெரிய வருகின்றது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# நெடுந்தாரகை படகு ஜூலை முதல் சேவையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையிலான நெடுந்தாரகை படகு சேவை அடுத்த மாதம் சேவைக்கு திரும்பும் என்று தெரிய வருகின்றது.

நெடுந்தீவுக்கான படகு சேவையில் ஈடுபட்டு வந்த நெடுந்தாரகை படகு சேவை திருத்தப் பணிக்காக திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

தற்போது, திருத்தப் பணிகள் முடிவடைந்த நிலையில் நெடுந்தாரகை படகு ஜூலை மாதம் சேவைக்கு திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், நெடுந்தாரகை படகு நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபட ஆரம்பித்ததும் சேவையில் ஈடுபடும் மற்றொரு படகான வடதாரகை பராமரிப்பு சேவைக்காக நீர்கொழும்புக்கு கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# துணவியில் வாள்வெட்டு இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

இரு குழுவினர் இடையே இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை - துணவி பகுதியில் இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல் மற்றொரு குழுவினரை வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளது. இதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் [illegible] கொண்டு வருகின்றனர்.

# அதிகார பகிர்வு குறித்து தெளிவாக தேர்தல் அறிக்கையில் கூறவேண்டும்

## தமிழ் அரசு கட்சி சஜித்திடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 12

அதிகார பகிர்வு குறித்து தமிழ் , சிங்கள மக்கள் தெளிவாக - விபரமாக அறியக் கூடியவாறு தேர்தல் அறிக்கை இருக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதஸவிடம் கூறியுள்ளோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கை தமிழ் அரசு கட்சியினரை அவர்களின் தலைமை பணிமனையில் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுமந்திரன் எம். பி.,

அதிகார பகிர்வு சம்பந்தமாக எங்களுக்கு இருக்கிற ஏமாற்றங்கள் தொடர்பில் எடுத்துக் கூறினோம். நாங்கள் வேண்டாம் எனக் கூறும் 13ஆம் திருத்தத்தைக்கூட மிக மோசமான நிலைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளார்கள்.

கொடுத்ததைக்கூட சூழ்ச்சிகள் ஊடாக மீளப் பெற்றுக்கொள்கின்றார்கள். அதனால் இப்போது அது மிக நலிவடைந்துள்ளது.



13ஆம் திருத்தத்தை நடைமுறைபடுத்துவேன் எனக் கூறுவதில் கூட இன்றைக்கு அர்த்தம் இல்லாத நிலைமை காணப்படுகிறது - என்று சஜித்துக்கு கூறினோம்.

எதிர்க்கட்சி தலைவர் கூறுகையில்,

கிராமங்கள் நகரங்களைக் கட்டி எழுப்பி அதனூடாக பிரதேசத்தைக் கட்டியெழுப்பி அதன் பின்னரே மாவட்டம், மாகாணம் நாடு என்பதே தன்னுடைய கோட்பாடு என்று கூறியிருந்தார்.

விசேடமாக நிதி பகிர்வு குறித்துக் கூறினார். அதிகார பகிர்வை கொடுத்து விட்டு, நிதி பகிர்வை கொடுக்காவிடில் அதில் பயனில்லை என்றும் கூறினார்.

அதேவேளை இனங்கள் மத்தியில் உள்ள பரஸ்பர நம்பிக்கையீனத்தை இல்லாதொழிக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும் என எம்மிடம் கூறினார்

அதன் பின்னர் எதிர்க்கட்சி தலைவரிடம் நாம்,

தமிழ் மக்களின் அடையாளம் பேணப்பட வேண்டும். தமிழர்களின் பூர்வீகமான நிலப்பரப்பான வடக்கு - கிழக்கு தாயகம் இணைந்ததாகப் பூரண அதிகார பகிர்வு வேண்டும். அது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். எமது மக்கள் எதிர்பார்க்கும் அதிகார பகிர்வு பற்றிப் பேசாமல் வேறு விடயங்களை சொல்வது அதிகார பகிர்வு குறித்துச் சொல்லாது தப்பியோடுவதாக இருக்கக் கூடாது. அதிகார பகிர்வு தொடர்பில் விபரமாகத் தமிழ் சிங்கள மக்களுக்கு சொல்ல வேண்டும் எனக் கூறினோம்.

இதற்கு பதிலளித்த அவர், எனது தேர்தல் அறிக்கையில் அது குறித்துத் தெளிவாகக் கூறுவேன் - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 235 ஏக்கர் காணிகள் வனவள திணைக்களத்தால் விடுவிப்பு

வவுனியா, ஜூன் 12

**வவுனியா - ஓமந்தை - பனிக்கர் புளியங்குளத்தில் 235 ஏக்கர் காணி வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.**



நேற்று முன்தினம் பனிக்கர் புளியங்குளத்துக்கு கண்காணிப்பு பயணமாக சென்றபோதே வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் கு. திலீபன் எம். பி. தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதி மக்கள் பலர் வாழ்வாதார பயிர் செய்கைக்கு நீண்ட காலமாக காணியின்றி அவதிப்பட்டனர். இந்நிலையில் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் என்ற வகையில் வனவளத் திணைக்களத்துடன் தாம் நடத்திய பேச்சைத் தொடர்ந்து இந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டன என்று திலீபன் எம். பி. தெரிவித்தார்.

235 ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்கள அதிகாரிகள் மக்களிடம் கையளித்தனர். அந்தப் பகுதியை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு தலா ஓர் ஏக்கர் வீதம் இந்தக் காணிகள் பகிரப்படவுள்ளன. (ஐ)



# சிவமோகனின் வாகனம் விபத்து; காத்தான்குடியில் ஒருவர் காயம்!

காத்தான்குடி, ஜூன் 12

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் பயணித்த வாகனம் விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

மட்டக்களப்பு வீதி - காத்தான்குடி - தாழங்குடாவில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொத்துவில் - அறுகம்குடாவிலிருந்து வவுனியா நோக்கி சென்ற வாகனத்தில் மூவர் பயணித்திருந்தனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மின்தூணுடன் மோதியே விபத்துக்கு உள்ளானது. இதில், வாகனத்தில் பயணித்த ஒருவரே காயமடைந்தார்.

காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# பாதுகாப்பான புகையிர கடவை அமைக்கக் கோரி போராட்டம்!



கிளிநொச்சி, ஜூன் 12

பாதுகாப்பற்ற புகையிரத கடவையை பாதுகாப்பானதாக மாற்றித் தருமாறு கோரி இந்திராபுரம் கிராம மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி - முகமாலை - இந்திராபுரம் கிராம மக்கள் 2019ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் மீளக்குடியேறினர்.

சுமார் 350இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்தப் பகுதியின் பிரதான போக்குவரத்து மார்க்கமாக உள்ள வீதியை பாதுகாப்பான புகையிரத கடவையாக மாற்றி தருமாறு கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கிராமத்தில் வெடிபொருட்கள் தற்போதும் அகற்றப்பட்டு வருகின்றன. இதனால், மாற்றுவழியை பயன்படுத்த முடியாதுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஏற்கனவே, குறித்த பாதையை பாதுகாப்பான புகையிரத கடவையாக மாற்றியமைக்குமாறு கோரி புகையிரதத் திணைக்களம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு மனுக்களையும் அனுப்பி வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி புலமைப்பரிசில் 19ஆம் திகதி வழங்கப்படும்!

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி புலமை பரிசில் திட்டத்தின் கொழும்பு மாவட்ட புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக, பொருளாதார சிரமங்களோடு கல்வி மற்றும் இணை பாடவிதானங்களில் விசேட திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்கள், தமது கல்வியை தொடர்வதற்காக ஜனாதிபதி புலமை பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 6 ஆயிரம் மாணவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்துக்கு 242 புலமை பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இதன்படி, புலமைப்பரிசில் பெறும் அனைவருக்கும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையுடன் உரிய புலமை பரிசில் எதிர்வரும் 19ஆம் திகதி வழங்கப்படும்.

ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தரம் 01 முதல் தரம் 11 வரையான ஒரு இலட்சம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கும் திட்டத்தின்படி, கொழும்பு மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் புலமை பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே வலயக் கல்வி அலுவலகங்களால் ஜனாதிபதி நிதியத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் வழங்கத் தகுதிபெற்றவர்களின் பட்டியலின் படி, கொழும்பு மாவட்டத்தில் உள்ள 396 பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 758 மாணவர்களுக்கு நிலுவைத் தொகையுடன் புலமைப்பரிசில்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட கைபேசி எண்களுக்கு அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் புலமைப் பரிசில் பெறுவது குறித்த தகவல்கள் அறிவிக்கப்படும்.

மேலும் இது தொடர்பான மேலதிக தகவல்கள் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மாவா விற்பனை; பொலிஸ் அலட்சியம்

வவுனியா, ஜூன் 12

வவுனியா - பூந்தோட்டத்தில் - மாவா எனப்படும் போதைப்பொருளை கலந்த பாக்கு விற்பனை அதிகரித்து வருகிறது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கி இருந்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த மாவா விற்பனை தொடர்பில் போதை ஒழிப்பு தொடர்பான யுக்திய நடவடிக்கை இலக்கத்துக்கு தகவல் வழங்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஊழியர் சேமலாப நிதியத்தில் 3.9 ட்ரில்லியன் ரூபாய் இருப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, ஜூன் 12

2024 பெப்ரவரி மாதம் நிறைவடைந்தபோது ஊழியர் சேமலாப நிதியத்தில் 3 இலட்சத்து 91 ஆயிரத்து 230 கோடி ரூபாய் இருப்பு காணப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதி திணைக்களத்தின் மூலம் அந்த நிதியத்தின் 1958/ 15 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட அலுவல்களுக்கு மட்டும் அதனை பயன்படுத்துவதற்கும் வேறு வேலைத்



திட்டங்களுக்கு அந்த நிதி பயன்படுத்தப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# கடும் காற்றால் இரு வீடுகள் சேதம்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக வீசிய அதிக காற்றால் இரண்டு வீடுகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே 399 கிராம சேவையாளர் பிரிவிலும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே 227 கிராம சேவையாளர் பிரிவிலும் தலா ஒரு வீடு சேதமடைந்தன.

இதனால், அந்த வீடுகளில் வசிக்கும் இரு குடும்பங்களை சேர்ந்த 7 பேர் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு வாரங்களில் ஐ. தே. கவுடன் சக்திவாய்ந்த கூட்டணி இணையும்!

## ரவி கருணாநாயக்க சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 12

**இன்னும் இரு வாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் சக்தி வாய்ந்த கூட்டணி இணையும் என்று அந்தக் கட்சியின் தேசிய செயலாளராக பதவியேற்ற ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**



மேலும், ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பற்ற, தேசிய மற்றும் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க சுமார் 95 இலட்சம் வாக்குகளைப் பெறுவார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ரவி கருணாநாயக்க நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதான கட்சியின் செயல்குழுவில் கட்சியின் தேசிய செயலாளராக என்னை நியமித்தார். புத்துயிர் பெற்று நாட்டு மக்களின் நலனுக்காக ஐக்கிய தேசிய கட்சியை கட்டியெழுப்ப வேண்டும்.

பொருளாதார மாற்ற சட்டமூலத்தை முன்வைத்ததன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான முதல்படியை ஜனாதிபதி எடுத்துள்ளார்.

இந்த சட்டமூலம் நாட்டு மக்களுக்கு சாதகமான சட்டமூலம் என்றே கூற வேண்டும். இதன் மூலம் கடனின் அளவும் வாழ்க்கை செலவும் மட்டுப்படுத்தப்படும்.

எதிர்க்கட்சிகள் செய்வது ஜனாதிபதியை விமர்சித்து பலிக்கடாக்களை உருவாக்குவதுதான். எனினும், நாட்டைக் கட்டியெழுப்பும் விடயங்கள் தொடர்பான விவாதங்களுக்கு அவர்கள் தயாராக இல்லை.

வாதங்களைத் தவிர்த்தல். விவாதத்துக்கு வர பயப்படுவது ஏன் என்று கேள்வி எழுப்புகிறோம். விவாதங்களுக்கு பயந்து ஒளிந்து கொள்வது ஏன்? அவர் திறமையற்றவர் என்பதால் விவாதத்தில் இருந்து ஓடிவிட்டார். இந்த விவாதத்துக்கு ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்பட வேண்டும் என்று நான் கூறுகின்றேன்.

பாராளுமன்றம் கலைக்கப்படுகிறது என்று கூறுவது பொய். நாட்டை திவால் நிலையில் இருந்து காப்பாற்றும் திறன் எங்களிடம் உள்ளது. நாங்கள் அனைவரும் ஒன்று கூடி ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்சி சார்பற்ற வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவோம். தேர்தலில் சுமார் 95 இலட்சம் வாக்குகளைப் பெறும் திறன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது - என்றார். (ஐ)

# நாடு முழுவதும் 6 மாதங்களில் 153 பொலிஸார் தாக்கப்பட்டனர்

## வடக்கு, கிழக்கில் 13 சம்பவங்கள்

கொழும்பு, ஜூன் 12



நாட்டில் கடந்த 6 மாதங்களில் 5 பொலிஸ் பரிசோதகர்கள், 13 உப பொலிஸ் பரிசோதகர்கள் உட்பட 153 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 143 பொலிஸார் கடமையில் இருந்தபோது தாக்கப்பட்டனர்.

பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவங்களில் வடக்கில் 5 சம்பவங்களும் கிழக்கில் 8 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. வடக்கில், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உள்ளடங்குவர்.

கொழும்பு மாவட்டத்தில், 28 சம்பவங்களில் 31 பேர் தாக்கப்பட்டுள்ளனர். 13 சார்ஜன்ட்கள், 14 கான்ஸ்டபிள்கள், மூன்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் உப பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவரும் உள்ளடங்குவர்.

அடுத்தபடியாக வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் அதிக எண்ணிக்கையான பொலிஸார் தாக்கப்பட்டுள்ளனர். இரு மாகாணங்களிலும் சுமார் 12 முறைப்பாடுகள் என 24 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. மத்திய மாகாணத்தில் 10 தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, கடமைகளை செய்யும்போது அதிகாரிகளை தாக்கும் நபர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அனைத்து பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (ஐ)

# கணினி அறிவு பெற்றவர்கள் நாட்டில் 39 வீதமாக அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் கணினி கல்வியறிவு 39 வீதமாக அதிகரித்துள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*2023ஆம் ஆண்டு கணினி கல்வியறிவு கணக்கெடுப்பு அறிக்கையின்படி, இலங்கையில் 5 முதல் 69 வயதுக்கு இடைப்பட்ட ஐந்தில் இருவர் கணினி அறிவு பெற்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

அத்துடன், ஐந்தில் மூன்று பேருக்கு டிஜிற்றல் கல்வியறிவு உள்ளது. இது 63.5 சதவீதமாக உள்ளது. அத்துடன், நாட்டில் 20.2 வீதமான குடும்பங்கள் கணினி அல்லது மடிக் கணினியை பயன்படுத்துகின்றனர். நகர்ப்புற மக்களின் கணினி மற்றும் டிஜிட்டல் கல்வியறிவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டளவில் கணினி கல்வியறிவு 4.7 சதவிகிதம் அதிகரித்துள்ளது. நகர்ப் புறங்களில் அதிகபட்ச கணினி கல்வியறிவு 52.9 சதவிகிதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல்மாகாணம் அதிக கணினி அறிவைப் பெற்றுள்ள அதேவேளை கிழக்கு மாகாணம் மிகக் குறைந்த கணினி அறிவைக் கொண்டுள்ளதாகவும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# ஈரநில அழிப்பை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் இயற்றப்படும்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

கொழும்பு, ஜூன் 12

சட்டவிரோத கட்டுமானங்களை அழிப்பது, ஈர நிலங்களை அழிப்பது உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் இயற்றப்படவுள்ளன. அதற்காக அனைத்து அரச நிறுவனங்களுடனும் பேச்சு நடத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்தியானந்தா தெரிவித்தார்.

ஈர நிலங்களை பாதுகாத்தல், அதனுடன் தொடர்புடைய பல்லுயிர் பாதுகாப்பு, சுற்றுச்சூழலில் சமநிலையை உருவாக்குதல் போன்றவற்றுக்கு முன்மாதிரி நாடாக இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து அறிவையும் சேகரித்து ஒரு திட்டத்தைத் தயாரிப்பதே இந்த பொதுவான ஒருமித்த கருத்து. சுற்றுச்சூழல் எதிர்கொள்ளும் உலகளாவிய சவால்களுக்கு இந்த கொள்கைகளை ஒரு முன்மாதிரி நாடாக செயல்படுத்துவது எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சின் செயலாளர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சர்வதேச ஈரநிலப் பூங்கா பங்களிப்புடன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஆசியாவின் முதல் மாநாடு குறித்து தெரிவிக்க இந்த செய்தியாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது .

எதிர்வரும், 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை அத்தர முல்லை தியசரு பூங்காவில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் இதை ஏற்பாடு செய்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள 15 நாடுகளில் உள்ள 70க்கும் மேற்பட்ட ஈர நிலப் பூங்காக்களில் இருந்து கிட்டத்தட்ட 100 பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்- என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்த கோழியின் இறைச்சி விற்பனையில்

## நுகர்வோர் அதிகார சபை எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 12

கோழி இறைச்சியை கொள்வனவு செய்யும்போது அதிக கவனம் செலுத்துமாறு நுகர்வோர் அதிகார சபை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்த கோழிகள் சந்தையில் விற்கப்படுகின்றன என்று மாமிச உணவுகள் பற்றிய சோதனைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சஞ்சய் இராசிங்க தெரிவித்தார்.

இவ்வாறான கோழி இறைச்சியை உட்கொள்வது உடலுக்கு தீங்கு விளைவிக்கும். எனவே, கோழி இறைச்சியை கொள்வனவு செய்யும்போது அது தொடர்பில் கவனம் செலுத்தவும்.

இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகள் வெள்ளை நிறத்தில் இருக்கும். வெள்ளத்தில் மூழ்கி இறந்த கோழிகளின் இறைச்சி சிவப்பு நிறத்தில் காணப்படும். எவ்வளவு சூடாக்கி வேகவைத்தாலும் கிருமிகள் அழியாமல் போகலாம். இது பற்றி ஏதேனும் தகவல் தெரிந்தால், உடனடியாக வாடிக்கையாளர் சேவை அதிகாரிக்கு தெரிவிக்கவும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் இருக்கும் பட்சத்தில் 1977 என்ற எண்ணுக்கு அறிவிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

வெள்ளம் பாதித்த இடங்களில்

# வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது

கொழும்பு, ஜூன் 12

தென்னிலங்கையில் வெள்ள நீர் வடிந்து வருவதால், ஈக்களின் பெருக்கம், வயிற்றுப்போக்கு மற்றும் வைரஸ் காய்ச்சல்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் காணப்படும் சாதகமான சூழ்நிலை ஈ முட்டைகள் முதிர்ச்சியடைவதை துரிதப்படுத்துவதுடன், வெள்ள நீர் குறையும் போது ஈக்கள் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது.

புதிதாக குஞ்சு பொரித்த இந்த ஈக்கள், உணவு ஆதாரங்களைத் தேடி, அடிக்கடி மலம், குப்பைகள் மற்றும் அசுத்தமான பரப்புகளை நோக்கி ஈர்த்து, சுகாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்துகின்றன." என மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

"ஈக்களின் எழுச்சியின் விளைவுகள் பயங்கரமானவை என்பதுடன், வயிற்றுப்போக்கு நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சலுக்கு காரணமான பற்றீரியா மற்றும் வைரஸ்கள் உள்ளிட்ட நோய்க் கிருமிகளை ஈக்கள் காவி கொண்டு வருகின்றன" என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்ட உணர்வு ஏன் ஏற்படவில்லை?

## சிரேஷ்ட விரிவுரையாளர் கேள்வி

கல்முனை, ஜூன் 12

**பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இனவெறித் தாக்குதல்களைக் கண்டித்து மேற்குலக நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் போராட்டங்கள் வீரியமாக முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், அந்த உணர்வானது இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு ஏன் ஏற்படவில்லை? என்று சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் மௌலானா கேள்வி எழுப்பியுள்ளார்.**

இஸ்லாமிய வரலாற்றில் பலஸ்தீன் ஓர் இதயமாகத் திகழ்கிறது. இதன் ஆரம்ப வரலாறு, போராட்டங்கள் நடைபெற்ற பின்னணி மற்றும் அதன் புதிய பரிமாணங்கள் தொடர்பாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஓர் ஆயவு மாநாட்டை நடத்த வேண்டியதன் அவசியம் உணரப்படுகின்றது.

கடந்த பல மாதங்களாக தமது சுயநிர்ணயத்துக்காக பலஸ்தீன மக்கள் உறுதியோடும் வீரத்தோடும் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவது எமது உணர்வுகளுக்கு உரமூட்டுகிறது.

காஸாவில் தொடங்கி தற்போது ரபாவின் எல்லையில் முடக்கப்பட்டு வாழ்வதா? மடிவதா? என்ற ஜீவ மரண போராட்டத்தின் உச்சத்தை பலஸ்தீன் மக்கள் அடைந்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற மேற்குலக நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர் போராட்டங்கள் வீரியமாக முன்னெடுக்கப்படுகின்றபோது அந்த உணர்வானது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கதவை ஏன் தட்டவில்லை என்று சிவில் சமூகத்தினர் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆகவே, இனியும் தாமதியாமல் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பலஸ்தீனம் தொடர்பில் ஆய்வு மாநாடு ஒன்றை அவசரமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் முன்வர வேண்டும் - என்றார்.



# அறகலய போராட்டம் சிந்திக்கத் தூண்டியது

## கூறுகிறார் முஷாரப்

சாய்ந்தமருது, ஜூன் 12

நாட்டில் ஏற்பட்ட அறகலய மக்கள் எழுச்சிப் போராட்டம், நாடு தொடர்பிலும் அபிவிருத்தி விடயத்திலும் சிந்திக்கத் தூண்டியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவித்தார்.

ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி போன்ற நகரங்களின் மீது வீசப்பட்ட அணுகுண்டு தாக்கங்களின் பின்னர் ஜப்பான் எவ்வாறு அபிவிருத்தியில் முன்னிலைக்கு வந்ததோ, அதேபோன்று இலங்கையில் ஏற்பட்ட அறகலய போராட்டத்தின் பின்னர் அமைச்சுக்களும் நிறுவனங்களும் அபிவிருத்திகள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சாய்ந்தமருது ஜீ. எம். எம். எஸ். பாடசாலையில் மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக ஆரம்ப கட்டமாக இரண்டு மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்து குறித்த கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்காக நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (எ)

# திருமலை கடற்கரையில் கபடி போட்டி நிந்தவூர் அல் அஷ்ரக் அணி சம்பியன்



திருகோணமலை, ஜூன் 12

நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் 18 வயது கபடி அணியினர் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றனர்.

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை கபடி சங்கம் நடத்திய தேசிய மட்ட முதலாவது கடற்கரை சம்பியன்ஷிப் - 2024 போட்டிகள் திருகோணமலை கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பங்குபற்றிய நிந்தவூர் அல் -அஷ்ரக் தேசிய பாடசாலையின் 18 வயதுப் பிரிவு கபடி அணியினர் தங்கப் பதக்கம் வென்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்தனர். (எ)

# தமிழர்களின் தலைவிதியை மாற்ற வந்தவர்கள் நாங்கள்

## சொல்கிறார் பிள்ளையான்

ஆலையடிவேம்பு, ஜூன் 12

கிழக்கு மாகாண தமிழ் மக்களின் தலைவிதியை மாற்ற வேண்டும் என்று புறப்பட்ட ஓர் அரசியல் இயக்கம் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி. அந்த அடிப்படையில் அம்பாறையிலும் திருகோணமலையிலும் எமது கட்சியை பலப்படுத்தி ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை மாற்றினால் மாத்திரமே கல்விப்புலத்தில் உள்ள தேவைகள், நமக்குத் தேவையான ஆளணி பற்றாக்குறையை



நிவர்த்தி செய்து, பதவி உயர்வுகளைப் பெறலாம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 600 சிற்றூழியர்களை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. அம்பாறையில் மொட்டில் வந்த முஷாரப் என்பவர் 2400 பேரை நியமித்துக்கொண்டனர். தமிழர்களுக்கு யாரும் இல்லை. ஒன்றும் இல்லை.

ஆகவே தான் கிழக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆணையை பெறும் நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஏனைய கட்சிகள் இதற்கான திட்டமிடலை மேற்கொள்ளவில்லை. இதற்காகவே இன்று ஆலையடிவேம்புக்கு வருகை தந்துள்ளேன். இதுபோன்ற பாராட்டு நிகழ்வுகளை நடத்தி மக்கள் மனங்களிலும் மாணவர்கள் மனங்களிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பது எனது விருப்பம்- என்றார். (எ)



# குச்சவெளி மருத்துவமனைக்கு மருந்து பொருட்கள் அன்பளிப்பு

குச்சவெளி, ஜூன் 12

திருகோணமலை குச்சவெளி பிரதேச மருத்துவமனையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக முபாரக் பௌண்டேஷன் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியது.

மருந்துப் பொருட்களை கையளிக்கும் நிகழ்வு குச்சவெளி மருத்துவமனை வளாகத்தில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச மருத்துவ அதிகாரி எம். பண்டாரவிடம் இந்த மருந்துப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் குச்சவெளி பிரதேச மருத்துவ அதிகாரி, குச்சவெளி கே. வி. சி. அமைப்பின் உத்தியோகத்தர்கள், முபாரக் பௌண்டேஷன் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

# குளத்தில் மூழ்கி உயிரிழந்த இளைஞனின் சடலம் மீட்பு!

வாழைச்சேனை, ஜூன் 12

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்னை பகுதியில் குளத்து நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ரிதிதென்னை குளத்துக்கு அருகில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞனே குளக்கட்டில் சறுக்கி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

உயிரிழந்த இளைஞனின் சடலத்தை மீனவர்கள் கண்டெடுத்து கரைக்குக் கொண்டு வந்தனர்.

ரிதிதென்னை புதிய கிராமம் பகுதியைச் சேர்ந்த 23 வயது சாவி முகம்மது நிஹாஸ் என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தலில் தோல்வி பெல்ஜியம் பிரதமர் இராஜினாமா



பிரஸ்சல்ஸ், ஜூன் 12


**ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததால் பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அதே போன்று பிரான்ஸிலும் பாராளுமன்றத்தை கலைப்பதாக ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரான் அறிவித்துள்ளார்.**

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான பாராளுமன்றத் தேர்தல் அண்மையில் நடந்து முடிந்தது. இதில் பிரான்ஸ், பெல்ஜியம் உட்பட 27 நாடுகள் கலந்து கொண்டன. இது இந்தியாவுக்கு அடுத்தபடியாக உலகின் 2 ஆவது மிகப்பெரிய பாராளுமன்றத் தேர்தலாகும். எனவே இந்தத் தேர்தல் அங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்தத் தேர்தலில் பெல்ஜியம் நாட்டின் ஆளுங்கட்சியான பிளெமிஷ் தாராளவாதிகள் மற்றும் ஜனநாயகக் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. இதில் அந்தக் கட்சி வெறும் 5. 8 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது.

இந்தத் தேர்தலில் பிரதமர் அலெக்சாண்டர் டி குரு தனது கட்சி வேட்பாளரை ஆதரித்து தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். எனினும் தேர்தலில் மிக மோசமான தோல்வியைத் தழுவியதால் இதற்கு தான் முழு பொறுப்பேற்பதாக அவர் கூறினார்.

மேலும் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் அவர் அறிவித்தார். இதன்படி பெல்ஜியம் மன்னர் பிலிப்பை சந்தித்து அவர் தனது இராஜினாமா கடிதத்தை வழங்கியுள்ளார். (எ)



# திருமங்கை ஆழ்வார் சிலையை திரும்ப ஒப்படைக்க இணக்கம்

லண்டன், ஜூன் 12

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து கொள்ளையடிக்கப் பட்ட திருமங்கை ஆழ்வார் சிலையைத் திரும்ப ஒப்படைப்பதற்கு இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது.

தமிழக கோவிலில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட 60 சென்றி மீற்றர் உயரம் கொண்ட திருமங்கை ஆழ்வார் வெண்கல சிலை இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அருங் காட்சியகத்தில் உள்ளது. 16 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இந்த சிலையை மீளப்பெறுவதற்கு இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்தது. இந்த பேச்சுகளின் பலனாக திருமங்கை ஆழ்வார் சிலையை இந்தியாவிடம் ஒப்படைக்க ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் தற்போது ஒப்புதல் வழங்கியுள்ளது. (எ)

# அப்பிள் சாதனங்களுக்கு தடை

## எலான் மஸ்க் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 12

'எனது நிறுவனத்துக்குள் வருபவர்கள் தங்களது அப்பிள் சாதனங்களை வாசலிலேயே ஒப்படைக்க வேண்டும், அவை அங்கு பாதுகாப்பாக வைக்கப்படும்' என உலகின் முன்னணி பணக்காரரான எலான் மஸ்க் தெரிவித்தார்.

ஐபோன் தயாரிப்பு நிறுவனமான அப்பிள் நிறுவனம், அண்மையில் செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ.) சார்ந்த பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டது. செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி நிறுவனமான ஓபன் ஏ. ஐ. நிறுவனத்தின் மென்பொருளை ஒருங்கிணைத்து தனது புதிய தயாரிப்புகளில் இணைக்க உள்ளதாக அறிவித்தது. குறிப்பாக, அப்பிள் சாதனங்களில் அப்பிள் இன்டெலிஜென்ஸ் புகுத்தப்படும் என்றும் ஓபன் ஏ. ஐ நிறுவனம் அறிவித்தது.

அப்பிள் நிறுவனத்தின் இந்த முயற்சிக்கு டெஸ்லா மற்றும் எக்ஸ் நிறுவனங்களின் தலைவர் எலான் மஸ்க் கண்டனம் வெளியிட்டுள்ளார். அத்தோடு,



தங்களுக்கென சொந்தமாக ஏ. ஐ. தொழில்நுட்பத்தை உருவாக்க முடியாத அப்பிள் நிறுவனம், ஓபன் ஏ. ஐ. மூலம் உங்களது (வாடிக்கையாளர்கள்) பாதுகாப்பு மற்றும் தனியுரிமையை உறுதிப்படுத்தி விடும் என்பது அபத்தமாக இருக்கிறது. உங்களின் தரவுகளை ஓபன் ஏ.ஐ.-இடம் கொடுத்துவிட்டால் அதற்கு என்னவாகும் என்பது பற்றி அப்பிள் நிறுவனத்துக்கு எந்த அக்கறையும் இல்லை. அவர்கள் உங்களை விற்கிறார்கள் என்றும் எலான் மஸ்க் கூறியுள்ளார். (எ)

# "இந்தியாவின் ஸ்திரத்தன்மை மீது உலக நாடுகள் கவனம் கொள்ளும்"

புதுடில்லி, ஜூன் 12

எந்த ஒரு நாட்டிலும் குறிப்பாக ஒரு ஜனநாயக நாட்டில் ஓர் அரசு மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடிப்பது என்பது மிகப்பெரிய சவால். மோடி அரசு அதனை நிகழ்த்தியுள்ளது. இப்போது இந்தியாவின் அரசியல் ஸ்திரத்தன்மை மீது உலக நாடுகள் கவனம் கொள்ளும்- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக ஜெய்சங்கர் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டார். மோடி 3. 0 அமைச்சரவையில் ஜெய்சங்கருடன் ராஜ்நாத் சிங், அமித் ஷா, நிதின் கட்கரி, நிர்மலா சீதாராமன் ஆகியோர் முந்தைய ஆட்சியில் தாங்கள் வகித்த அதே பதவியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர். இந்த நிலையில் நேற்றுக் காலை ஜெய்சங்கர் உத்தியோகபூர்வமாக அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜெய்சங்கர் தெரிவித்தவை



வருமாறு,

"மீண்டும் ஒரு முறை வெளிவிவகார அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதை மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். கடந்த ஆட்சியில் வெளிவிவகார அமைச்சு வெகு சிறப்பாகச் செயல்பட்டது. ஜி - 20 மாநாட்டை தலைமையேற்று நடத்தினோம். கோவிட் - 19 சவால்களை எதிர்கொண்டோம். கொரோனா தடுப்பூசிகளைத் தயாரித்துப் பகிர்ந்து கொண்டோம். உக்ரைன் உட்பட வெளிநாட்டு போர்களில் சிக்கிய இந்தியர்களை பாதுகாப்பாக தாயகம் மீட்டு வந்தோம்.

எல்லையில் சீனாவின் அத்துமீறல் தந்திரங்கள், மேற்கு ஆசியா மற்றும் உக்ரைனில் நிலவும் போர்ச் சூழல்களுக்கு மத்தியில் இந்தியாவின் நலன்களைப் பாதுகாத்தல் என்பன வெளிவிவகார அமைச்சராக கவனிக்க வேண்டிய முக்கிய விவகாரங்களாக இருக்கும்.

பாகிஸ்தான் மற்றும் சீனாவுடனான நம் உறவும் வெவ்வேறு. அவற்றுடனான பிரச்னைகளும் வெவ்வேறு. பாகிஸ்தானுடன் ஆண்டாண்டு காலமாக இருக்கும் எல்லை தாண்டிய பயங்கரவாத சிக்கலுக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும். சீனாவுடனான எல்லைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

இப்போது இருக்கும் சூழலில் உலக நாடுகள் பல பிரச்னைகளால், மோதல்களால் பிரிந்து கிடக்கின்றன. இத்தகைய சூழலில் இந்தியா மீது பல்வேறு நாடுகளும் நம்பிக்கை கொண்டுள்ளன. இதனால், இந்தியாவின் தாக்கமும், அதன் நன்மதிப்பும் அதிகரிக்கும்- என்றார். (எ)

# வெடிகுண்டு தாக்குதலில் 7 இராணுவத்தினர் பலி!

இஸ்லாமாபாத், ஜூன் 12

பாகிஸ்தான் கைபர் பக்துங்க்வா மாகாணத்தில் இராணுவத்தினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அவர்கள் லக்கி மார்வார்ட் நகரில் சென்றபோது வாகனத்தை நோக்கிப் பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். மேலும் அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்து சிதறியது. இதில் இராணுவத்தினர் 7 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தாக்குதல் சம்பவத்துக்கு பிரதமர் ஷபாஸ் ஷெரீப் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார். (எ)

# மலாவி துணை ஜனாதிபதி பயணித்த விமானம் மாயம்

லிலாங்வே, ஜூன் 12

மலாவி நாட்டின் துணை ஜனாதிபதி பயணம் செய்த விமானம் மாயமாகியுள்ளது. விமானத்தை தேடும் பணியில் அந்த நாட்டு இராணுவம் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது.

மலாவி பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான போர் விமானத்தில் துணை ஜனாதிபதி உட்பட 9 பேர் தலைநகரிலிருந்து நேற்றுக்காலை 9 மணியளவில்



புறப்பட்டதாகவும், விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் ரேடாரின் தொடர்பை இழந்ததாகவும் மலாவி ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் 26ஆம் திகதி சுகயீன போராட்டம்!

கொழும்பு, ஜுன் 12

**நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 26ஆம் திகதி சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.**

ஊதிய முரண்பாட்டை தீர்க்க வலியுறுத்தியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைக்கு சமாந்தரமாக எதிர்வரும் 12ஆம் திகதி கண்டன போராட்டத்தை ஏற்பாடு செய்யவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்.

# விவசாயத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை - ஓமான் உடன்படிக்கை

கொழும்பு, ஜுன் 12

நாட்டில் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் இலங்கை மற்றும் ஓமானுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிற்கும் ஓமான் தூதுவருக்கும் இடையில் நேற்று முன்தினம் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை இரு நாடுகளுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ பயணங்கள் ஆய்வுகள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதிக்கு வலுச்சேர்க்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# அழகுசாதன பொருட்களால் பெரும் சுகாதார பிரச்னைகள்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்


கொழும்பு, ஜுன் 12

சட்டவிரோதமான மற்றும் தீங்கு விளைவிக்கும் ஒப்பனை முறைமை மற்றும் அழகுசாதன பொருட்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி சமூகமயப்படுத்தப்படுவதனால் பெரும் பொது சுகாதார பிரச்னைகள் ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நாட்டில் பயன்படுத்தப்படும் அழகுசாதனப் பொருட்களின் இரசாயன கலவை மற்றும் முன்னேற்றம் போன்றவற்றை பரிசோதிப்பதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையிடம் போதிய ஆய்வுகூட வசதிகள் இல்லையெனவும் இந்த சங்கம் கூறுகிறது.

இந்த நிலையில், ஆய்வுகூட வசதிகளை வழங்குவதுடன், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆய்வுகூடங்களை பயன்படுத்தி குறுகிய காலத்தில் இந்த பூச்சுகளை பரிசோதிக்க சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

(ஐ)



ஆசிரிய தொழிலில் தமது சேவையை உள்வாங்குமாறு வலியுறுத்தி அகில இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டையில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம்...!

# தவறிவீழ்ந்து பெண் மரணம்!

கொழும்பு, ஜுன் 12

பாலத்தில் இருந்து தவறி வீழ்ந்த பெண் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார்.

இரத்தினபுரி - கிரியெல்ல பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த 33 வயது பெண் ஒருவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரியெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# "சேவை நீடிப்பு சட்டத்துக்கு முரணானது"

கொழும்பு, ஜுன் 12

நாட்டில் எந்தவொரு காலத்திலும் சட்ட மா அதிபருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படவில்லை. இது அரசமைப்புக்கு முரணானது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அத்துடன், சட்ட மா அதிபரின் பதவிக்காலத்தை ஜனாதிபதி ஆறு மாதங்களுக்கு நீடித்தால் அது சட்டமா அதிபர் பணிமனையின் சுதந்திரத்துக்குப் பேரிடியாக அமையும் - என்றும் கூறினார். (ஐ)

# மனைவியை நண்பனுடன் சேர்ந்து கொன்றவர் கைது

கொழும்பு, ஜுன் 12

நண்பனுடன் சேர்ந்து மனைவியை படுகொலை செய்த குற்றச்சாட்டில் கணவனையும் அவரின் நண்பரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


கொழும்பு - தலங்கமைம பகுதியை சேர்ந்த 31 வயதான பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

கணவன் மனைவி இருவரும் வாடகை வீடொன்றில் வசித்து வந்துள்ளனர். கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, கணவன் தனது மனைவியை நண்பனுடன் சேர்ந்து தாக்கி படுகொலை செய்தார் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இருவரையும் கைது செய்துள்ளனர்.

(ஐ)

# பேருந்து - வான் விபத்து; 10 பேர் காயமடைந்தனர்!



நுவரெலியா, ஜுன் 12

தனியார் பேருந்தும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியா - கினிகத்தேனை - தியகல வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 8 பேரும் வானில் பயணித்த இருவரும் காயங்களுக்கு உள்ளாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கனமழை பெய்துகொண்டிருந்த நிலையில் அதிவேகமாக பயணித்த வான் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பேருந்தை மோதியதாகக் கூறப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# அமைச்சர் ஜீவன் தொண்டமான் நாட்டின் சட்டத்தை மீறியுள்ளார்!

## பெருந்தோட்ட நிறுவனங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 12

அமைச்சர் ஜீவன் தொண்டமான் அப்பட்டமாகவும் பொறுப்பற்ற விதத்திலும் நாட்டின் சட்டத்தை மீறியுள்ளார் என்று பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

அண்மையில் நுவரெலியா பீட்ரு பெருந்தோட்டத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் வெளிப்படுத்திய சட்ட விரோத மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையைக் கடுமையாக கண்டிப்பதாகவும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவர் சட்டத்தை புறக்கணிப்பதும் அச்சுறுத்தல் தந்திரங்களை பயன்படுத்துவதும் பெருந்தோட்ட சமூகத்தில் பெரும் கவலையையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் நீதி மற்றும் சட்டத்தின் கொள்கைகளை குறைத்து மதிப்பிடுவது மட்டுமல்லாமல், அனைத்து தொழில் பங்குதாரர்களின் பாதுகாப்புக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது.

நுவரெலியா பீட்ரூ தோட்டத்துக்கு பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் குழுவினர் வருவதை அறிந்த அமைச்சர் ஜீவன் தொண்டமானும் அவரது சகாக்களும் பலவந்தமாக தொழிற்சாலை வளாகத்துக்குள் நுழைந்து 4 மணிநேரம் அங்கு தங்கியிருந்தனர் என்று பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக அரசாங்கம் மற்றும் பொலிஸார் விரிவான விசாரணை நடத்த வேண்டும் எனவும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பதவியை வகிக்க சட்ட ரீதியான அனுமதி இல்லை.

அரசமைப்பின் 83ஆவது உறுப்புரிமைக்கு அமைய, ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6 வருடங்களுக்கு அதிக காலத்துக்கு அதிகரித்துக் கொள் வதென்றால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்களிப்புக்கு செல்லவேண்டும்.

ஆனால், அரசமைப்பின் 19ஆம் திருத்தத்தின்போது எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயம்தான், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தவணைக்கு மட்டுப்படுத்துவது மற்றும் ஒரு தவணையை 6 வருடத்திலிருந்து 5 வருடமாகக் குறைப்பதாகும்.

இதன் பிரகாரம் 19ஆம் திருத்தத்துக்குப் பின்னர் நாட்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி 5 வருடங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுக்கு வந்திருக்கிறது. அதனால் எந்த வகையிலும் 5 வருடங்களுக்கு அதிக காலத்துக்கு ஜனாதிபதி பதவியை கொண்டு செல்ல முடியாது.

அத்துடன் அரசியலமைப்பின் 40ஆவது உறுப்புரையின் பிரகாரம். ஜனாதிபதி பதவி வெற்றிடமான சந்தர்ப்பத்தில், பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுபவர் - முன்னர் (வெற்றிடமான) ஜனாதிபதியாக பதவி வகித்த நபரின் பதவிக்காலம் முடிவடையும் வரைக்குமே பதில் ஜனாதிபதி பதவி வகிக்க முடியும். இதன் பிரகாரம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த எஞ்சிய காலப்பகுதி வரைக்குமே ஜனாதிபதி பதவி வகிக்க முடியும் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது - என்றார். (ஐ)

## ரணில்...

ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தை நீடிக்கக்கூடும்.

19ஆவது திருத்தம் ஜனநாயக சீர்திருத்தங்களை உறுதி செய்யவும் நல்லாட்சியை உறுதி செய்யவும் பாராளுமன்றத்தினதும் ஜனாதிபதியினதும் பதவிக் காலத்தை ஐந்தாக குறைக்கவும் முயன்றது. எனினும், பதவிக்காலம் தொடர்பான நிலைத்தன்மையை உறுதி செய்வதை அது புறக்கணித்தது.

19ஆவது திருத்தத்துக்கு அமைய பாராளுமன்றம், ஜனாதிபதியின் ஆறு வருட பதவிக்காலம் பற்றிய அனைத்து குறிப்புகளும் ஐந்தாண்டுகளாக மாற்றப்பட்டாலும் உறுப்புரை 83 (டி) கவனிக்கப்படாமலும் மாற்றப்படாமலும் ஜனாதிபதி விக்ரமசிங்கவுக்கு தனது பதவிக்காலத்தை நீடிப்பதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத்தின் ஐந்தாண்டு பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான எந்தவொரு சட்ட மூலத்துக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் ஒப்புதல் தேவை. அதைத் தொடர்ந்து வாக்கெடுப்பில் ஒப்புதல் பெற வேண்டும்.

எவ்வாறாயினும், பிரிவு 83(டி) இன் கீழ் சர்வஜன வாக்கெடுப்பு ஐந்து (5) ஆண்டுகளுக்கு அல்லாமல் ஆறு (6) ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்கப்பட்டால் மட்டுமே தேவைப்படும். இதன் பொருள் விக்கிரமசிங்க அரசமைப்பை மீறாமல் தனது சொந்த மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை 11 மாதங்கள் மற்றும் 29 நாட்களுக்கு நீடிக்க முடியும்.

விக்கிரமசிங்கவுக்கு இன்னும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நாடு தயாராக இல்லை எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்த கருத்துகளுடன் இதையும் சேர்த்து வாசிக்க வேண்டும் என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் - என்றுள்ளது. (ஐ)

## பொது...

அரசு கட்சி ஆதரிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளது. தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக நான் பிரசாரம் செய்வேன் - என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் காண முடியும். (ஐ)

## புதிய...

எனினும், நேற்றைய சந்திப்பில் அநுரகுமார ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக ஆதரவை கோரவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

நேற்றைய சந்திப்பில் தமிழ் அரசு கட்சி சார்பில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், சேவியர் குலநாயகம் ஆகியோரும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுரகுமார திஸநாயக்கவுடன் பிமல் ரட்நாயக்க, இ. சந்திரசேகரன் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ)

## ஐ.எம்.எவ்வின்...

பொருளாதார கொள்கைகள், பொருளாதார மறுசீரமைப்பு குறித்து கவனம் செலுத்தப்படும் - என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளளார். அத்துடன், மூன்றாவது தவணைக்கான வெற்றிகரமான மீளாய்வுக்கு அனைத்து நாடுகளினதும் ஆதரவை எதிர்பார்ப் பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தால் மூன்றாவது கடன் தவணையாக 33 கோடி அமெரிக்க டொலர் கடன் வழங்கப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியதைத் தொடர்ந்து 290 கோடி டொலரை கட்டம்கட்டமாகக் கடனாக வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீன...

நடைபெற்ற தமிழர் பொருளாதார மாநாட்டில் "சீன நாட்டின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் கடலட்டை பண்ணைகள் புதிய தாக்கங்களை உருவாக்கியுள்ளன. இவை கடற்றொழிலில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின் றன. குறிப்பாக, வடக்கு மீனவர்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கியுள்ள னர் என்று சிறீதரன் கூறியுள்ளார்.

"ஆனால், வடக்கிலும் மத்தியிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆட்சி அதிகாரம் இருந்த காலப் பகுதியிலேயே யாழ்ப்பாணம் அரியாலையில் சீன நாட்டின் நிறுவனத்துக்கு கடலட்டை குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்கான கடலட்டை பண்ணையை இவர்கள் வழங்கியிருந்தார்கள்.

"பின்னர் கடற்றொழில் அமைச்சராக எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்ற பின்னர் குறித்த சீன கடலட்டை பண்ணை மூடப்பட்டது. அவ்வாறிருக்கின்றபோது சிவஞானம் சிறீதரன் எந்த வித அடிப்படை ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை புலம்பெயர் தேசங்களின் நிகழ்ச்சிகளில் பொய்யுரைத்து வரு கின்றார்.

"வடக்கு, கிழக்கில் குறிப்பாக வன்னி பிரதேசத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பொருளாதார மேம்பாட்டுக்காக அவர் வகுக்கின்ற திட்டங்கள் மக்களிடத்தில் செல்வாக்கு பெற்றுவருவதை பொறுத்துக்கொள்ள முடியாத சிறீதரன் போன்றோர் தமது அரசியல் இருப்புகளும் கேள்விக்குறியாக இருக்கின்ற சூழலில் இவ்வாறான அவதூறுகளையும் பொய் பிரசாரங்க ளையும் நம்பியே தமது அரசியலை ஓட்ட வேண்டியிருக்கின்றது. ஆயினும், சிவ ஞானம் சிறீதரன் வடக்கில் எங்கே எந்த இடத்தில் சீன நிறுவனத்துக்கு கடலட்டை பண்ணைகள் உள்ளன என்பதை ஆதாரத்துடன் நிருபிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# நாட்டில் 89 வீத மரணங்களுக்கு தொற்றா நோய்களே காரணம்!

## 60 ஆயிரம் நோயாளர் வருடாந்தம் அடையாளம்

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் 89 வீத மரணங்களுக்கு தொற்றா நோய்களே பிரதான காரணம். அத்துடன், வருடாந்தம் தொற்றா நோயால் பாதிப்புற்ற சுமார் 60 ஆயிரம் நோயாளர்கள் அடையாளம் காணபடுகின்றனர் - என சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ பாலித மஹிபால தெரிவித்தார்.

கண்டியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார சேவைக்காக எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு உலக வங்கி சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி வழங்கவுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆயிரத்து 400 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் ஆரம்ப சுகாதார சேவையை மேலும் வலுப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

தொற்றா நோயால் நாளாந்தம் 50 தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்களில் 10 பேரில் நால்வர் அல்லது ஐவர் உயிரிழக்கின்றனர். ஆகையால், தேசிய நிறுவனங்களுடன் இணைந்து இதய நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக இதய இடையீட்டு ஆய்வகத்தை நிறுவ எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சமூகத்தில் உள்ள ஐவரில் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவராவார். 2030 ஆம் ஆண்டாகும் போது நால்வரில் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவராக இருக்கலாமென கணிப்பிடப்பட்டுள்ளது.

வருடாந்தம் சுமார் 60 ஆயிரம் புதிய நோயாளர்கள் இனம் கானப்படுகின்றனர். 4 ஆயிரம் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. அத்தோடு ஆண்டு தோறும் விபத்துகளால் 6 ஆயிரம் மரணங்கள் பதிவாகின்றன. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அங்கவீனர்களாகியுள்ளனர். நாட்டில் 89 விதமான மரணங்கள் தொற்றா நோய் காரணமாக ஏற்படுகின்றன - என்றார். (ஐ)

# தீவகத்தின் பிரச்னைகளுக்கு எமது ஆட்சியில் தீர்வு கிட்டும்!

## எரான் விக்ரமரத்ன தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 12

இந்த ஆட்சியிலும் தீவக மக்களின் தண்ணீர் பிரச்னை தொடர்கிறது. ஊர்காவற்றுறையை கடப்பதற்கு நீண்ட நேரம் செல்கின்றது. எமது ஆட்சியின்போது இவை சரி செய்யப்படும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவருடன் யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில், யுத்தம் நடைபெற்ற இந்தப் பிரதேசங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவில்லை - நாம் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக குரல் கொடுப்போம்.

13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் முதல் கட்டமாக மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படும்.

இப்போது ஏகாதிபத்திய அரசு இருக்கிறது. ஜனாதிபதியின் கையில் அதிகாரம் உள்ளது. 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் காணி, பொலிஸ் அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்துவதாக அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் கூறியுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம். அவர்கள் இந்த இடத்துக்கு வருவதற்கு 35 வருடங்கள் எடுத்துள்ளன.

கடந்த தேர்தலில் சஜித்துக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால், சிங்கள மக்களின் வாக்கோடு கோட்டாபய ஆட்சிக்கு வந்தார்.

எமது தலைவர் சஜித் பிரேமதாஸ அதற்கு ஆதரவாக அன்றி அனைத்து இனங்களுடனும் மதங்களுடனும் இணைந்தே செயல்படுவார் - என்றார். (ஐ-01)

## நிலைமை...

தெரிவித்தார்.

மேலும், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்து வது தொடர்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முறை மக்கள் மத்தியிலும் பொது வேட்பாளர் விடயம் பேசப்படுகிறது. எனவே, வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார். அதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், நான் சுயேச்சையாக போட்டியிடுவேன் - என்றார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில், சிவில் சமூகத்துக்கு மக்கள் ஆணையில்லை - என்று எம். ஏ. சுமந்திரன் எம். பி கூறியமை தொடர்பில் பதிலளித்த சிவாஜிலிங்கம்,

"அது தவறானது. மக்கள் தங்கள் பிரதிநிதியாகவே பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளனர். இதே நேரம், மக்கள் தமக்கானதை தாமே தெரிவு செய்வார்கள். அவ்வாறு மக்களால் உருவானதே சிவில் சமூகம். அவர்களுக்கும் தமக்கு என்ன தேவை என்பதனை தெரிவிக்க - சொல்ல முடியும்" - என்றார். (ஐ)

## டலஸ்...

பெற்றிருந்தனர்.

தற்போது, அந்தக் கட்சியிலிருந்து விலகி சுயாதீன மாக இயங்கி வருகின்றனர். இவர்களுடன் சேர்ந்து இயங்கிய ஜீ. எல். பீரிஸ் போன்றவர்கள் சஜித் அணியுடன் முன்னரே சேர்ந்து இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 2024...

பரீட்சையை நவம்பரில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

அவ்வாறு நடத்தப்பட்டால், 2025ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை 2025 செப்ரெம்பர் மாதம் நடத்த முடியும்.

"பிள்ளைகளின் நேரத்தை வீணடிப்பதைத் தடுக்க பரீட்சை நிறைவடைந்தவுடன் உயர்தர கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்து, பல்கலைக்கழக நுழைவை விரைவு படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## 11 பாடசாலைகள் மூடப்படும்

கொழும்பு, ஜூன் 12

பொசன் பண்டிகையை முன்னிட்டு 11 பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், அநுராதபுரம், மிஹிந்தலை மற்றும் தந்திரிமலை ஆகிய பகுதிகளிலுள்ள 11 பாடசாலைகள் மூடப்படும் என வடமத்திய மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ)

## தனியார் வங்கியில் பெரும் தீ பரவல்!

களுத்துறை, ஜூன் 12

மொரகஹஹேன நகரத்திலுள்ள தனியார் வங்கியில் பெரும் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ பரவல் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

களுத்துறை ஹொரண மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் இந்தத் தீ பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொலிஸார் கூறினர். தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## விஜயதாஸவுக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு!



கொழும்பு, ஜூன் 12

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராக நியமிப்பதையும் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் அங்கத்தவராக ஏற்றுக்கொள்ளப்படுவதையும் தடுத்து கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவான் சந்திம எதிரிமன்னே பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை நீடிக்க நேற்று உத்தரவிட்டார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொருளாளர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். அதில், சரத் ஏக்கநாயக்க, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பதில் பொது செயலாளர் கீர்த்தி உடவத்த மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை அடுத்து, தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அவிசாவளை துப்பாக்கிசூடு சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 12

கொழும்பு - அவிசாவளை நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்தார் என்று கூறப்படும் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவிசாவளை மற்றும் பூகொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28 மற்றும் 30 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி அவிசாவளை - தல்துவவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ்ப்பாணத்தில் மட்டும் 3,930 டெங்கு நோயாளர்கள்

### இவ்வருடத்தில் இதுவரை அடையாளம் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தகவல்

கொழும்பு, ஜூன் 12

**இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 3,930 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்த வருடத்தில் ஜூன் மாதத்தின் முதல் 11 நாட்களில் மாத்திரம் 971 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 25 ஆயிரத்து 891 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களின் எண்ணிக்கை 5,624 ஆகும்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,930 டெங்கு நோயாளர்களும் கம்பஹாவில் 2,487 டெங்கு நோயாளர்களும் கண்டியில் 1,986 டெங்கு நோயாளர்களும் இரத்தினபுரியில் 1,441 டெங்கு நோயாளர்களும் களுத்துறையில் 1,372 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பங்களாதேஷ் பிரஜையை திருமணம் செய்த பெண் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை!

களுத்துறை, ஜூன் 12

பங்களாதேஷ் பிரஜையை திருமணம் செய்த பெண் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்யப்பட்டார்.

களுத்துறை, ஹொரண, மீவன பலன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஹொரண மீவனபலன பகுதியைச் சேர்ந்த 58 வயது பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். இவர் பங்களாதேஷ் பிரஜை ஒருவரை திருமணம் செய்ததாகவும் பின்னர் இலங்கை வந்து தனது தங்கையுடன் வீட்டில் ஒன்றாக வசித்து வந்ததாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தின்போது உயிரிழந்தவரும் அவரது சகோதரியும் வீட்டின் கதவை மூடி உறங்கச் சென்ற நிலையில் முகத்தை மூடிக் கொண்டு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த சந்தேகநபர்கள் இருவர் சகோதரியின் கைகளை கட்டி வைத்துவிட்டு உறங்கிக் கொண்டிருந்தவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## நோயாளிகளின் பாதுகாப்பு, நல்வாழ்வு சாசனத்தின் இறுதி வரைவு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 12

நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பில் தயாரிக்கப்பட்ட சாசனத்தின் இறுதி வரைவை கையளிக்கும் நிகழ்வு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் சுகாதாரம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மயந்த திஸநாயக்க, சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட உப குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உபுல் கலப்பதி, பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, முன்னாள் சபா நாயகர் கரு ஜயசூரிய, இலங்கை மருத்துவ சபையின் முன்னாள் தலைவரும், சர்வோதய அமைப்பின் தலைவருமான வின்யா ஆரியரத்ன, உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அலகா சிம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த இறுதி வரைவு சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உபகுழு மற்றும் அதன் நிபுணர்கள் குழுவினால் உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த சாசனம் தெற்காசிய வலயத்தில் நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள முதலாவது சாசனமாக அமைகின்றது. (எ)

## ஏ-9 வீதியில் விபத்து இருவர் உயிரிழப்பு!

கொழும்பு,ஜூன் 12

கண்டி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஓட்டோவும் காரும் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு மாத்தளை - நாவுல - அரங்கல பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த நாவுல பகுதியை சேர்ந்த 76 வயது பெண்ணும் 64 வயது ஆணுமே உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த மற்றொரு பெண் தம்புள்ளை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## தரமற்ற கண் மருந்து நாட்டில் பயன்பாட்டில்

கொழும்பு, ஜூன் 12

கண் நோயாளர்கள் சத்திரசிகிச்சையின் பின்னர் பயன்படுத்தப்படும் "பிரெட்னிசோலோன்" மருந்து தரம் குறைந்ததாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான 21 ஆயிரத்து 510 குப்பிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கண் மருந்தை பயன்படுத்திய இருவர் முழுமையாக பார்வையை இழந்துள்ளனர் என்று மருத்துவ நிபுணர் ஜி. ஜி. சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.